

தென்னிந்திய திருச்சபை - சென்னைப் பேராயம்

தூய தோமையார் மலை குருசேகரம்

# வெஸ்லி தமிழ் ஆலயம்

## ஜனவரி 2023


அறுவடைத் திருவிழா – 13-02-2022
அறுவடைத் திருவிழா – 09-10-2022

# ஆயர் மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

உங்கள் யாவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு முழுவதும் கிருபை பாராட்டின ஆண்டவருக்கு கோடான கோடி நன்றிகளை ஏறெடுப்போம்.

## கிறிஸ்மஸ் கால நிகழ்வுகள்

பெத்தலையில் ஒரு கவியரங்கம், பாடகர் குழு கிறிஸ்மஸ் கீத வழிபாடு, ஐக்கிய சங்கங்களின் கிறிஸ்மஸ் கீத வழிபாடு, குடும்ப கீத வழிபாடு ஆக அனைத்து நிகழ்வுகளும், கிறிஸ்மஸ் சிறப்பு வழிபாடு மற்றும் புத்தாண்டு வழிபாடு அனைத்திலும் கர்த்தரின் கரம் நம்மை வழிநடத்தியதற்காக கடவுளுக்கு நன்றி ஏறெடுக்கிறேன்.

### கிறிஸ்மஸ் கீத பவனி

கடந்த 05-12-2022 முதல் 10 நாட்கள் நமது ஆலயத்தின் குடும்பங்களை சந்தித்து கிறிஸ்து பிறப்பின் மகிழ்வை பாடல்களின் வழியாக பகிர்ந்து கொண்ட அன்பர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாண்டு கிறிஸ்மஸ் கீத பவனி பாடகர் குழு 100% குடும்பங்களை சந்தித்தது மிகவும் பாராட்டுக்குரியது. காலண்டர், பரிசுகள், இனிப்புகள் ஆகியவற்றை கிறிஸ்மஸ் கீத பவனி சென்ற போது வழங்க திட்டமிட்ட சேகர குழுவிற்கும் அதற்கான ஆயுத்தங்களை இரவு பகல் பாராது செய்திட்ட Media Team மற்றும் தன்னார்வலர்கள் அனைவருக்கும் என் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

### வெகுமதி ஞாயிறு

நமது பேராயத்தின் கிராமப்புற குருசேகரங்களில் உள்ள பொருளாதரத்தில் பின்தங்கிய இறைமக்களுக்கு புத்தாடைகள் வழங்க வெகுமதிகள் கேட்டபோது கடந்த நான்கு வாரங்களில் அநேக குடும்பங்கள் இதுவரை இல்லாத அளவு புத்தாடைகளை படைத்துள்ளீர்கள். அவற்றையெல்லாம் கிராமமாக ஆயுத்தம் செய்து சுமார் 60 கிராமப்புற குருசேகரங்களுக்கு பகிர்ந்தளித்துள்ளோம். உதாரத்துவமாக வெகுமதி பொருட்களை படைத்த அனைத்து குடும்பங்களுக்கும் என் பாராட்டுகள், நன்றிகள். கடவுள் உங்கள் குடும்பங்களை இரட்டத்தனையாக ஆசிர்வதிப்பாராக.

## நாட்காட்டி - *Calaendar*

இவ்வாண்டு நமது ஆலய நாட்காட்டி (Calendar) சிறப்பாக நமது ஆலயத்திற்கென்றே வடிவமைத்துள்ளோம். வசனங்கள் படிக்க, மனப்பாடம் செய்ய எளிய முறையையும் பின்பற்றியுள்ளோம். தங்கள் திறமைகளாலும் ஒத்துழைப்பாலும் இந்த நாட்காட்டி குறித்த காலத்திற்குள் வெளிவர துணைப்புரிந்த திரு. எடிசன், திரு. நீல் ஜெயகரன், திரு. செல்வின், திரு. கலைச்செல்வன், திரு. பென் ஆகியோருக்கும் பிழைத்திருத்தம் செய்ய உதவிய திருமதி. லீமா ரோஸ் செல்வின், திருமதி. பெமினாள் பாக்கியம் கலைச்செல்வன் ஆகியோருக்கும் பல வகையில் உதவியாக இருந்த திரு. பீட்டர் ஆகியோருக்கும் என் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். தினமும் அந்தந்த நாட்களுக்குரிய வசனங்களை படித்து, நினைவில் கொண்டு அதை அடுத்த மாதம் முதல் பாராமல் எழுதும் வழக்கத்தை கடந்த ஆண்டை போலவே பின்பற்ற யாவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

ஒவ்வொரு வழிபாட்டிலும் பங்களித்த ஒவ்வொருவருக்கும், அவ்வழிபாடுகளுக்கு பொறுப்பாளர்களாக இருந்தவர்களுக்கும் என் நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆலய அலங்காரம், அலங்கார விளக்குகள் ஆகியவற்றை பொறுப்பேற்று மிக நேர்த்தியாக செய்து கொடுத்த அன்பர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாகனம் நிறுத்துவதில் (Vehicle Parking) முழு ஒத்துழைப்பு நல்கிய திருச்சபையாருக்கு நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்து வழிபாடுகள் மற்றும் நிகழ்வுகள் அனைத்தையும் சிறப்பாக நடத்துவதற்கு முழு ஒத்துழைப்பு கொடுத்த, உதவிகள் செய்திட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கும், மீடியா குழுவினருக்கும், செயலர் திரு.**சற்குணம்**,பொருளர் திரு.**எடிசன்** அவர்களுக்கும்,தன்னார்வலர்களுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடவுளுக்கு துதியையும், மாட்சியையும் ஏறெடுத்து, இறையாசி பெற்றுக்கொண்ட திருச்சபையார் அனைவருக்கும் என் பாராட்டுகள்.

## கிறிஸ்மஸ் மரவிழா

கடந்த 26-12-2022 அன்று நடைபெறவிருந்த "கிறிஸ்மஸ் மரவிழா" நிகழ்வு மழைக்காரனமாக ஒத்திவைக்கப்பட்டது. "கிறிஸ்மஸ் மரவிழா" வருகின்ற 26-01-2023 வியாழன் அன்று நடைபெறவுள்ளது. இதில் அனைவரும் கலந்துக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

### இளம்தம்பதியர் சிறப்பு கூடுகை

வருகின்ற 22-01-2023 ஞாயிறு அன்று காலை வழிபாட்டிற்கு பிறகு இளம்தம்பதியருக்கான சிறப்பு கூடுகை நமது ஆலயத்தில் நடைபெறவுள்ளது. இக்கூடுகை திருமணம் முடித்து 10 ஆண்டுகளுக்குள் உள்ள தம்பதியருக்கானது. ஞாயிறு அன்று காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும். கலந்து கொள்ளும் தம்பதியரின் பிள்ளைகளுக்கு சிறப்பு விளையாட்டுப்போட்டிகள், வண்ணம் தீட்டுதல், வீடியோ காட்சி ஆகியவை ஒழுங்கு செய்யப்படுகிறது. திருமணம் முடித்து 10 ஆண்டுகளுக்குள் உள்ள தம்பதியர் தங்கள் வருகையை பதிவுசெய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

### குடியரசுதின கொடியேற்றம்

வருகின்ற 26-01-2023 வியாழன் அன்று காலை 8.00 மணிக்கு நமது ஆலயத்தில் குடியரசுதின கொடியேற்றம் நடைபெறும். இந்திய தேசத்தின் குடிமக்களாக நாம் அனைவரும் இந்த நிகழ்வில் பங்கேற்போம்.

### அரசு தேர்வு எழுதுவோருக்கான சிறப்பு இறைவேண்டல் கூடுகை

வருகின்ற 29-01-2023 ஞாயிறு அன்று காலை 10.30 மணி முதல் மாலை 12.30 மணி வரை, அரசு பொது தேர்வு எழுதும் பத்தாம், பதினோராம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு சிறப்பு இறைவேண்டல் கூடுகை நமது ஆலயத்தில் நடைபெறும். நமது திருச்சபையின் பிள்ளைகள் இந்த கூடுகையில் தவறாது பங்கு பெற அன்புடன் அழைக்கிறேன்.

### சாட்சியின் ஞாயிறு

இவ்வாண்டின் ஒவ்வொரு ஐந்தாவது ஞாயிற்று கிழமை வழிபாடுகள் சாட்சியின் ஞாயிறு வழிபாடுகளாக கடைபிடிக்கப்படும். வருகின்ற 29-01-2023 ஞாயிறு வழிபாடு சாட்சியின் ஞாயிறு வழிபாடாக நடைபெறும்.

நாம் பிரவேசித்திருக்கிற புதிய ஆண்டு 2023-ல் கடவுள் புதிய கிருபைகளை, புதிய நன்மைகளை, புதிய ஆசிர்வாதங்களை தந்து வழி நடத்துவாராக.

இறைப்பணியில் உங்கள்
ஆயர்



குறிப்பு : தங்களின் ஜெப தேவைகளுக்குத் தயங்காமல் எப்போது
வேண்டுமானாலும் என்னைத் தொடர்பு கொள்ளலாம்.
தொலைபேசி : 044-22347[illegible]

# திருமறைக்குத் திரும்புவோம்

**"உமது வார்த்தை என் கால்களுக்கு தீபம்**
**அது என் பாதைக்கு வெளிச்சம்" - சங்கீதம் *119:105***

அமெரிக்காவில் உள்ள அலபாமா என்ற ஊரில் 1880 - ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27 - ஆம் நாள் ஒரு தம்பதிகளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. சில ஆண்டுகளில் அக்குழைந்தை நோய்வாய்ப்பட்டுக் கண்பார்வையை இழந்தது, அதை தொடர்ந்து பேசும் ஆற்றலையும், கேட்கும் ஆற்றலையும் இழந்தது. இவ்வாறு தீவிர ஊனமடைந்த சிறுபெண்ணே ஹெலன் கெல்லர், உலகில் சாதனை புரிந்த பெண்களில் ஒருவராக திகழ்கின்றார்கள், எப்படி?

Braile என்ற எழுத்து முறையைக் கற்றும், பிறர் பேசும் போது தன விரல்களை அவர்களில் உதடுகளின் மேல் வைத்து, அறிந்தும் (Lip reading) நன்கு கற்று தேர்ந்தார்கள். பிறரை சார்ந்திராமல் தானே நம்பிக்கையோடு வாழ்ந்தார்கள். 'என் வாழ்க்கை வரலாறு, என் சமயம், நான் வாழும் உலக இருளில் இருந்தது' ஆகிய நூல்களை எழுதினார். உலகின் கோடிக்கணக்கான உடல் ஊனமுற்றோருக்கு நம்பிக்கை ஊட்டுபவராக மாத்திரமல்லாமல் அவர்களில் ஈடேற்றத்திகாகவும் சேவை செய்தார்.

'உமது வார்த்தை என் கால்களுக்கு தீபம். அது என் பாதைக்கு வெளிச்சம்'. சங்கீதம் 119:105. இந்த கடவுளுடைய வார்த்தை ஹெலன் கெல்லர் வாழ்வில் நம்பிக்கையை கொடுத்துது. ஆகவே கடவுளுடைய வார்த்தைகள் அடங்கிய திருமறையை திரும்ப திரும்ப படித்தார். இதனால் அவரது திருமறையின் Braile எழுத்-துகள் அவர் பலமுறை தன் விரல்களால் தடவி படித்ததால் அழிந்து போயின. திருமறையில் கடவுளை அறிந்ததாக கூறுகிறார்.

ஆம்! மனித வடிவில் வந்த கிறிஸ்து இயேசு கடவுளை நமக்கு வெளிப்படுத்தினார். இந்த இயேசுவை நோக்கி பேதுரு கூறினார், "ஆண்டவரே யாரிடத்தில் போவோம் வாழ்வுதரும் வார்த்தைகள் உம்மிடத்தில் உண்டே" என்றார். அந்த வார்த்தைகள் இன்றும் நமக்கு வாழ்வு தருகின்றன. திருமறையின் ஒவ்வொரு பக்கங்களிலும் வழியும், வாழ்வும், வாய்மையுமாக இயேசுவை கண்ட ஹெலன் கெல்லரைப் போல் நாமும் திருமறை வார்த்தைகளை ஆத்தும் கண்களால் காண்போமாக!

குறைவுகளே இல்லாத மாந்தர்கள் இல்லை, குறைவுகள் மத்தியில் இறைமகன் இயேசுவின் வழியாகவும், அவரது வார்த்தைகள் வழியாகவும், இறைமகனிடத்தில் நம்பிக்கை வைக்கும் போது நாம் மெய்வாழ்வை காண்கிறோம். இம்மெய்வாழ்வைக் கான இயேசுவினிடத்தில் பற்றுக் கொள்வோமா!

இவ்வாண்டை நன்மையால் முடிசூட்டுவாராக. ஆமென்

## வழிபாட்டு ஒழுங்குமுறை - ஜனவரி 2023

| நாள் | நேரம் | வழிபாடு | அருளுரை தலைப்பு | அருளுரையாளர் |
|---|---|---|---|---|
| 01-01-2023 ஞாயிறு | காலை 8:30 மணி | புதிய ஆண்டு திருவிருந்து வழிபாடு | அனைவருடனும் தொடரும் கடவுளின் உடன்படிக்கை | ஆயர் |
| | மாலை 6:30 மணி | உடன்படிக்கை திருவிருந்து வழிபாடு | தொடக்க நூல் 9:8-17<br>கலாத்தியர் 4:21-31 ; லூக்கா 22:14-23 | ஆயர் |
| 08-01-2023 ஞாயிறு | காலை 8:30 மணி | காலை வழிபாடு | அனைவருக்குமான கடவுளின் வெளிப்பாடு | DR. கிளாட்வின் கேபிரியல் |
| | மாலை 6:30 மணி | மாலை வழிபாடு | ஏசாயா 60:1-7<br>எபிரேயர் 1:1-12 ; மத்தேயு 8:5-13 | திரு. ஜான் சாமுவேல் பென்னர் |
| 15-01-2023 ஞாயிறு | காலை 8:30 மணி | திருவிருந்து வழிபாடு | ஒருமைப்பாட்டுக்கான அழைப்பு | ஆயர் |
| | மாலை 6:30 மணி | மாலை வழிபாடு | எசேக்கியல் 37:15-23<br>எபேசியர் 4:1-6 ; யோவான் 15:1-12 | திரு. தேவ மித்திரன் |
| 22-01-2023 ஞாயிறு | காலை 8:30 மணி | காலை வழிபாடு | பற்றுறுதியுடன் செயல்பாட்டில் ஒருங்கிணைப்பு | ஆயர் |
| | மாலை 6:30 மணி | மாலை வழிபாடு | யோசுவா 3:9-17<br>திருத்தூதர் பணிகள் 9:20-25 ; மாற்கு 1:21-34 | திரு. ஜான் சாமுவேல் பென்னர் |
| 29-01-2023 ஞாயிறு (சாட்சியின் ஞாயிறு) | காலை 8:30 மணி | காலை வழிபாடு | மெய்யான பக்திமை | ஆயர் |
| | மாலை 6:30 மணி | மாலை வழிபாடு | மீக்கா 6:1-8<br>யாக்கோபு 1:19-27 ; மத்தேயு 6:1-8 | திரு. தேவ மித்திரன் |

## உடன்படிக்கை வழிபாடு



நாள் : 01-01-2023, ஞாயிற்றுகிழமை

நேரம் : மாலை 6.30 மணி

இந்த சிறப்பு வழிப்பாட்டில் குடும்பம் குடும்பமாக அமர்ந்து திருவிருந்தில் பங்கேற்று, புதிய ஆண்டில் கடவுளோடு உடன்படிக்கையை புதுப்பித்துக்கொள்வோம்.

## இளம்தம்பதியர் சிறப்பு கூடுகை



நாள் : 22-01-2023, ஞாயிற்றுகிழமை

நேரம் : காலை 11.00 மணி

சிறப்பு செய்தி : Rev. ஜேம்ஸ் கெய்சர்

திருமணம் முடித்து 10 ஆண்டுகளுக்குள் உள்ள தம்பதியர் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவும்.

## குடியரசுதின கொடியேற்றம்



நாள் : 26-01-2023, வியாழக்கிழமை

நேரம் : காலை 8.00 மணி

இடம் : CSI வெஸ்லி தமிழ் ஆலயம்,
தூய தோமையார் மலை,
அனைவரும் வாரீர்!

## கிறிஸ்மஸ் மரவிழா



நாள் : 26-01-2023, வியாழக்கிழமை

நேரம் : மாலை 3.00 மணி

இந்நிகழ்வில் அனைத்து வயதினருக்கும் விளையாட்டு போட்டிகள் நடைபெறும் மற்றும் 12 வயதிற்குட்பட்ட நமது சபை சிறுபிள்ளைகளுக்கு கிறிஸ்மஸ் பரிசு வழங்கப்படும்.

## சாட்சியின் ஞாயிறு



நாள் : 29-01-2023, ஞாயிற்றுகிழமை

நேரம் : காலை 8.30 மணி

சாட்.சியின் ஞாயிறு வழிபாடு

## அரசு தேர்வு எழுதுவோருக்கான சிறப்பு இறைவேண்டல் கூடுகை



நாள் : 29-01-2023, ஞாயிற்றுகிழமை

நேரம் : காலை 10.30 மணி

சிறப்பு செய்தி : Dr. A. ஜார்ஜ்

அரசு தேர்வு எழுதும் மாணவ, மாணவிகள் அனைவரும் கலந்து கொண்டு இறை ஆசி பெற்றுக்கொள்ளவும்.

## வருந்துகிறோம்


MRS. MENAGA . W

நமது சபையின் அங்கத்தினர் திருமதி. மேனகா வில்சன் அவர்கள் தனது 74 ஆவது வயதில் 17-12-2022 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.


MR. THEOPHILUS JOSEPH . E.M

நமது சபையின் அங்கத்தினர் திரு. தியோபிளாஸ் ஜோசப் அவர்கள் தனது 72 ஆவது வயதில் 26-12-2022 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

கவலையில் வாடும் குடும்பத்தினர்களை ஜெபத்தில் தாங்க கேட்டுக்கொள்கிறோம்.

## உபவாச ஜெபம்

நாள் : 07-01-2023, சனிக்கிழமை

நேரம் : காலை 10 மணி முதல்
பிற்பகல் 1 மணி வரை

பெண்கள் - உபவாச ஜெபம் நடைபெறும்.




லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்
குருத்தோலை பவனி
லெந்து கால தின தியானம்


விடுமுறை வெதாகமப்பள்ளி - 2022


வாலிபர் ஞாயிறு
முதியோர் ஞாயிறு சிறப்பு கூடுகை



# ஆலய ஆண்டு விழா - 2022



# ஆண்டவரின் அழைப்பு

இந்த வாழ்கையில் நம் சாதனைகளை வைத்து நமது வாழ்வின் வெற்றியை எடைபோட முடியாது. அது நமது சொத்துகளோ அல்லது அந்தஸ்தோ கூட கிடையாது. வெற்றியின் அளவுகோல் நமது வாழ்வில் கடவுளின் அழைப்பை எவ்வளவு நிறைவேற்றியிருக்கிறோம் என்பதை அடுத்ததே. உலகிற்கு முன்பாக புழுக்களாக வாழ்ந்து மாலையின்றி மரித்துப்போன அப்போஸ்தலரின் வாழ்க்கையைப் போல அது இருக்கலாம். இவ்வுலகம் அவர்களுக்குத் தகுதியின்றிப் போயிற்று.

வாழ ஒரே வாழ்க்கையுண்டு. இன்னொரு வாய்ப்பு கிட்டப்போவதில்லை. நாம் வாழ்வதோ கடவுளது கிருபையால். பழைய நாட்களைத்திரும்பிப்பார்ப்போமானால்சிலருக்குஇன்பமானநினைவுகளும் சிலருக்கு துன்பமான நினைவுகளும் இருக்கும். ஆனால் இறுதியில் கடவுள் மட்டுமே நிஜம். அவர் ஒருவரே போதுமானவர் என்றறிவோம். இந்தப் பாடத்தைத்தான் நாம் கற்றுக்கொள்ள கர்த்தர் விரும்புகிறார். அவர் நம்மை அழைத்த அழைப்பின் நோக்கத்தை அவர் நிச்சயமாய் நிறைவேற்றுவார். நம்மை அழைத்தவர் அவரே. அவர் அல்பாவும் ஒமேகாவுமானவர். அவர் துவக்கமும் முடிவுமானவர். நமது விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவரும் அவரே. நாம் உண்மையற்றவர்களாயிருந்தாலும் அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் நமது அன்பு அப்பாவயிருப்பாதல் நமது வாழ்வில் எவ்விதத் தவறும் செய்வதில்லை. அவ்வப்பொழுது நாம் வேண்டும் என்று நினைப்பது நமக்கு கிடைக்காமற்போனாலும் நமது தேவைகளை அவர் சந்திப்பார் என்பது நிச்சயம். சில சமயங்களில் ஆண்டவர் நமது வாழ்வில் அனுமதிப்பதெல்லாவற்றையும் நாம் புரிந்துக்கொள்ள முடியாமல் போனாலும் அவரது அபார இரக்கமும், மாறாத நேசமும், அவரது அளவற்றக் கிருபையும் தவறாது என்பது திண்ணம். நாம் சந்தேகமின்றி அவரைப்போல் மறுரூபமாவோம். அவர் நம்மை பலத்தின்மேல் பலத்திற்கும், கிருபையின்மேல் கிருபைக்கும், மகிமையின்மேல் மகிமைக்கும்கொண்டு செல்வார். இப்புவியில் நமது வேலை முடிந்ததும் நாமும் பவுலோடு கூட சேர்ந்து "நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன் என் ஓட்டத்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே. அதை இறுதி நாளில் ஆண்டவர் எனக்குத் தருவார்; நீதியான அந்த நடுவர் எனக்கு மட்டுமல்ல, அவர் தோன்றுவார் என விரும்பிக் காத்திருக்கும் அனைவருக்குமே தருவார்." என்போம் (2 தீமோ. 4:7,8).



இவ்வுலக வாழ்வை நித்திய வாழ்விற்கு ஒப்பிடவே முடியாது. ஆனால் நமது ஆன்மீகப் பயணம் வனாந்தரப் பாதைதான் என்பதில் ஐயமில்லை. அது ஓர் ஆன்மீக யுத்தமாக இருக்கும். இளைஞன் தீமோத்தேயுவைப் பவுல் விசுவாசத்தில் நல்ல போராட்டத்தைப் போராடச் சொல்லுகிறார் (1 தீமோ. 6:12). நமது உடலும் உலகமும் தீய சக்திகளும் நமக்கு விரோதமாகவே இருக்கின்றன. நமக்கு கடவுளது வார்த்தை, கடவுளது கிருபை, கடவுளது ஆவி உண்டு. கடவுளது கிருபையும் வல்லமையும் போதுமனதாக இருந்தாலும் இந்த நீண்ட பயணத்தில் சில சமயம் வீழ்ச்சியடையத்தான் செய்கிறோம். இருந்தாலும் நாம் தூசியைத் தட்டிவிட்டு எழுந்து முன்னோக்கி நடைபோட்டு ஓட்டத்தை முடிக்கவேண்டும்.

எபிரெயர் 12:1,2 - **எனவே, திரண்டு வரும் மேகம் போல் இத்தனை சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து நிற்க எந்தச் சுமையையும், நம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் எந்தப் பாவத்தையும் உதறித்தள்ளிவிட்டு, நமக்குக் குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் மனஉறுதியோடு ஓடுவோமாக. நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும் அதை நிறைவு செய்பவருமான இயேசுவின் மீது கண்களைப் பதிய வைப்போம். அவர் தாம் அடையவிருந்த மகிழ்ச்சியின் பொருட்டு, இழிவையும் பொருட்படுத்தாமல் சிலுவையை ஏற்றுக்கொண்டார். இப்போது, கடவுளது அரியணையின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார்.**

---

*Happy New Year 2023*

**உங்கள் அனைவருக்கும் புதுவருட நல்வாழ்த்துக்கள்**

ஆயர், செயலர், பொருளர் மற்றும் சேகரகுழு அங்கத்தினர்கள்.




| | | |
|---|---|---|
| 1-Jan | Mr. | PHILIP . D |
| 1-Jan | Mr. | MOSES PAUL CHELLAKUMAR . M |
| 1-Jan | Mr. | FRANCIS RAMESH KUMAR . E |
| 1-Jan | Mr. | SAMUEL RAJ . R |
| 1-Jan | Mr. | IYYASAMI . M |
| 1-Jan | Mrs. | ANJALI . D |
| 1-Jan | Ms. | SILVIA ROSELIN . S |
| 1-Jan | Ms. | MILLINA SARONI . B |
| 1-Jan | Mr. | FRANKLIN RAJKUMAR |
| 1-Jan | Mr. | ANAND JEYAKUMAR . D |
| 1-Jan | Mr. | DAVID . B |
| 1-Jan | Ms. | RACHEL DOROTHY . H |
| 2-Jan | Mrs. | SAROJA . S |
| 2-Jan | Mr. | RAJA PRABAKARAN . S |
| 2-Jan | Mr. | SAMSON . B.J |
| 2-Jan | Mr. | KUMAR . J |
| 2-Jan | Mr. | CLINTON DANIEL |
| 3-Jan | Mr. | RAJEEV EDWARDS |
| 3-Jan | Ms. | CHERYL WINONA ANAND |
| 3-Jan | Ms. | DEEPA . S |
| 3-Jan | Mr. | AARON JOSEPH . S |
| 4-Jan | Mrs. | JEYA MALINI |
| 4-Jan | Ms. | BABY SHIRLEY . S.J |
| 5-Jan | Mrs. | PUPPY . M |
| 5-Jan | Mrs. | PUSHPA RANI . G |
| 5-Jan | Mrs. | BREMLY KAMALA . A |
| 5-Jan | Mr. | VINOTH . J |
| 6-Jan | Mrs. | PRASANNA BALAJI |
| 6-Jan | Mr. | JOHN MULLER . J |
| 7-Jan | Ms. | JENCY CHRISTINA . A |
| 8-Jan | Mr. | YOVAN . R |
| 8-Jan | Mr. | PRABHAKARAN . C |

| | | |
|---|---|---|
| 8-Jan | Mrs. | MARY RITA . M |
| 8-Jan | Mr. | MICHAEL RAJ . G |
| 9-Jan | Mrs. | ARPUTHAM . M |
| 9-Jan | Mrs. | JAYAKUMARI . J |
| 9-Jan | Mrs. | ESTHER INBARANI . S |
| 9-Jan | Mr. | CHRISTOPHER |
| 9-Jan | Mr. | JOTHI NATARAJAN . M |
| 9-Jan | Mstr. | RUBAN KUMAR . S |
| 9-Jan | Mstr. | MICKEY DANIEL |
| 10-Jan | Mrs. | REBECCA . R |
| 10-Jan | Mr. | MICHAEL MANOHARAN . D |
| 10-Jan | Mrs. | ANITHA ROSLINE LIO |
| 10-Jan | Mr. | DIXON RAJ . W |
| 10-Jan | Mr. | ROSHAN |
| 10-Jan | Mstr. | JOY SAMUEL . P |
| 11-Jan | Mr. | JULIUS YESUDOSS . D |
| 11-Jan | Mrs. | SHAMINI RABECKAL . S |
| 11-Jan | Ms. | NANCY PRIYA PREMKUMAR |
| 11-Jan | Mstr. | ANAN SMITH . M |
| 11-Jan | Ms. | SHERLIN . M |
| 12-Jan | Mr. | DHANASEKARAN . P |
| 12-Jan | Mrs. | MERLIN ROCHE NALINI |
| 12-Jan | Mrs. | ANNIE PAUL |
| 12-Jan | Mstr. | JOSHUA DANIEL M |
| 13-Jan | Mrs. | SHANTHA . C.K |
| 13-Jan | Mrs. | SURIA PREMALA KUMARI . S |
| 13-Jan | Mr. | SAM CHELLAIYA JEYAKUMAR . J |
| 13-Jan | Mrs. | JAYANTHI. M |
| 14-Jan | Ms. | SHABATNI CLARA JOY . C.J |
| 14-Jan | MR. | JESHWIN MATHEW . S |
| 15-Jan | Mr. | VASANTH FERNANDO . R |
| 15-Jan | Mrs. | ABISHA VASANTHA KUMARI . D |
| 16-Jan | Mr. | SRIDHAR STEPHEN RAJ . S |
| 16-Jan | Mr. | SOLOMON VICTOR |
| 16-Jan | Ms. | HELINA JENIFER . R |
| 17-Jan | Mr. | JAWAHARLAL . P |
| 17-Jan | Mrs. | DEIVA KIRUBAI LATHA . J |
| 17-Jan | Mr. | ASHOK . A |
| 17-Jan | Ms. | AKASHA . D |
| 17-Jan | Mstr. | ALAN SRISHRAJ . V. E |
| 18-Jan | Mr. | VANAGAMUDI |
| 18-Jan | Mstr. | RINEET SELVARAJ . N |
| 19-Jan | Mrs. | NANCY JAYAKUMARI . P |

| | | |
|---|---|---|
| 19-Jan | Mrs. | LILLIAN JENNIFER . R |
| 19-Jan | MR. | HARRIS DANIEL . L |
| 19-Jan | Ms. | MIRACKLIN ANGEL . J |
| 20-Jan | Mr. | DANIEL RAJKUMAR . A |
| 20-Jan | Mrs. | MARY JAKULIN . G |
| 20-Jan | Mrs. | JOHNSI MALLIGA . R |
| 20-Jan | Mr. | PAUL MOSES . H |
| 20-Jan | Mrs. | AMBIKA . S |
| 20-Jan | Mstr. | SIMON JOHN WILLIAMS . J |
| 21-Jan | Mr. | BASKAR VINOBA RAVI . D |
| 21-Jan | Mr. | PAUL MANOHAR . J |
| 21-Jan | Mr. | JACOB SAM KAMALESAN |
| 22-Jan | Mr. | EBENEZER VIJAYAKUMAR . G |
| 23-Jan | Mrs. | ROSALIND VIJAYAKUMARI |
| 23-Jan | Mrs. | REGINA ASHA KUMARI |
| 23-Jan | Ms. | ANGELIN DAPHNA . A |
| 23-Jan | Mr. | RUBAN SANTHOSH KUMAR . B |
| 24-Jan | Mr. | DAYANAND SANTHOSH KUMAR . S |
| 24-Jan | Mrs. | JANOLINE JAMES |
| 24-Jan | Mr. | SAM JAYAKUMAR P |
| 25-Jan | Mr. | SAMRAJ . C |
| 25-Jan | Mrs. | PAMELA DANIEL |
| 25-Jan | Mr. | JOHN ABRAHAM . L |
| 25-Jan | Mr. | RAVI CHANDRAN . C |
| 25-Jan | Mr. | DANIEL MANOHARAN . S |
| 25-Jan | Mr. | SAMUEL SEELAN . R |
| 25-Jan | Ms. | SHAILI |
| 25-Jan | Mstr. | SARON RAJA . M |
| 26-Jan | Mrs. | PREMA . M |
| 26-Jan | Dr. | JOSEPHINE PREMALATHA . P |
| 26-Jan | Ms. | NERANJANAA . S. S |
| 26-Jan | Ms. | EARLENE LIANDA . G |
| 27-Jan | Mr. | JAYAKUMAR . A |
| 28-Jan | Mrs. | SUPRIYA |
| 28-Jan | Mrs. | LILLY MARGARET . P |
| 28-Jan | Mr. | SAUEL |
| 28-Jan | Mr. | KIRUBAKARAN . G |
| 28-Jan | Mrs. | SAMITHA JEROME . E |
| 28-Jan | Mstr. | JOSHUA JOVIN PAUL |
| 28-Jan | Ms. | SAMANTHA . V |
| 29-Jan | Mr. | DEVARAJ DANIEL . I |
| 29-Jan | Mrs. | CURIE DHINAKARAN |
| 29-Jan | Dr. | SAMUEL MURALIDHARAN |

| | | |
|---|---|---|
| 29-Jan | Mr. | PAUL WILLIAM . K |
| 29-Jan | Mrs. | SHAMINI SHERUBA . J |
| 29-Jan | Mstr. | JEYDEN |
| 30-Jan | Mrs. | SUMITHRA JENNIFER |
| 30-Jan | Mr. | GOSPEL RUBEN . S |
| 31-Jan | Mrs. | ALICE RANI . L |
| 31-Jan | Mr. | PANEER SELVAM . S |
| 31-Jan | Mrs. | USHA VASSANTHAN |
| 31-Jan | Mr. | EDWIN JAYAKUMAR . C |




| | | | | |
|---|---|---|---|---|
| 3-Jan | Mr. | JOHNSON CHARLES . C | Mrs. | SUGANTHI CAROLINE |
| 5-Jan | Mr. | MADAN TILAK RAJ | Mrs. | SUBASHINI . B |
| 7-Jan | Mr. | JAISON VIGNESH KUMAR . N | Mrs. | JASMINE ROMITHA . S |
| 7-Jan | Mr. | DAYANAND SANTHOSH KUMAR . S | Mrs. | SHALINI EMMIMAL . R |
| 8-Jan | Mr. | NEIL JEYAHARAN . I | Mrs. | ANITA NEIL JEYAHARAN . S |
| 9-Jan | Mr. | JOHNSON . R | Mrs. | GLORY . J |
| 10-Jan | Mr. | MOSES . M | Mrs. | VIOLET SUSILA . M |
| 10-Jan | Mr. | ROBERT PRATHIP SINGH . M | Mrs. | ELEVENI ROBERT |
| 11-Jan | Mr. | SIROMONI J.R | Mrs. | SAROJINI SIROMONI . M.E |
| 11-Jan | Mr. | SATHYA SUVISESHAM . J | Mrs. | DEVA PRIYAJOTHI . O |
| 12-Jan | Mr. | MORIS SAMUEL . J | Mrs. | JENEFA MORIS |
| 16-Jan | Mr. | DEENADAYALA VICTOR . G | Mrs. | THABITHA FLORENCE |
| 16-Jan | Mr. | MATHAN . T | Mrs. | KETZIAL JEBA SELVI . J |
| 17-Jan | Mr. | GEORGE . D | Mrs. | PUSHPA RANI . G |
| 17-Jan | Mr. | SAMUEL AV KUMAR | Mrs. | BEULAH SAMUEL |

| | | | | |
|---|---|---|---|---|
| 17-Jan | Mr. | RAJA SIMHAR. R | Mrs. | NANCY SWAPNA. R |
| 18-Jan | Mr. | MATTHEWS. M. G | Mrs. | PREMA. M |
| 18-Jan | Mr. | YESUPADAM. Y | Mrs. | RUTH YESUPADAM |
| 18-Jan | Mr. | SARGUNAM. R | Mrs. | MARY VIJAYAKUMARI |
| 18-Jan | Mr. | SAMUEL YESUDASSON | Mrs. | REEJA YESUDASSON |
| 18-Jan | Mr. | VIMAL RAJKUMAR. J | Mrs. | EDWINA RACHEL GLORY. J |
| 18-Jan | Mr. | ASHOK. A | Mrs. | NANCY LETITIA ASHOK |
| 18-Jan | Mr. | JEROME NAVIN | Mrs. | SAMITHA JEROME. E |
| 20-Jan | Mr. | PETER JEYASEELAN. S | Mrs. | HELAN. P |
| 20-Jan | Mr. | JOHNSON PRASANNA KUMAR. Y | Mrs. | PRISCILLA PRIYADHARSHINI. J |
| 20-Jan | Mr. | JEBASELVAN CHRISTOPHER. T | Mrs. | ANNIE. A |
| 20-Jan | Mr. | PACKIARAJ. C | Mrs. | BABY. P |
| 21-Jan | Mr. | ABEL DEVA MITHREN | Mrs. | ISABELLA VIOLET RUTH. S |
| 21-Jan | Mr. | SAM MOSES PEARLSON. S | Mrs. | GEETHANJALI. K |
| 21-Jan | Mr. | YUVARAJA DANIEL | Mrs. | SHINEY VIJAYAKUMARI |
| 21-Jan | Mr. | AARON SOLOMON | Mrs. | CAROLIN LINCY. A |
| 22-Jan | Mr. | YOVAN. R | Mrs. | AMALA BAI. T |
| 23-Jan | Mr. | MOSES PREMKUMAR. B | Mrs. | PREMILA CATHERINE |
| 23-Jan | Mr. | MOSES INBAKUMAR. B | Mrs. | BEULAH REBEKKAL |
| 24-Jan | Mr. | TAMIL ARASU. A | Mrs. | IDA EVA INBAKUMARI |
| 24-Jan | Mr. | ABRAHAM WINSTON CECIL | Mrs. | DAISY PRIYA LATHA. S |
| 24-Jan | Mr. | PREM RAJ | Mrs. | ANITHA. R |
| 26-Jan | Mr. | ARAVINDA BHARATHI. M | Mrs. | MARY JAKULIN. G |
| 26-Jan | Mr. | SURESH. M | Mrs. | SHALINI. E |
| 27-Jan | Mr. | JACOB JEYARAJ. V | Mrs. | GNANA SELVI. J |
| 28-Jan | Mr. | EDWIN JAYAKUMAR. C | Mrs. | JAYA GEETHA. D |
| 28-Jan | Mr. | ISREAVEL JOSEPH. J | Mrs. | NISHA PACKIAM. P |
| 28-Jan | Mr. | SENTHIL KUMAR. S | Mrs. | CHRISTINAL. S |
| 29-Jan | Mr. | VISUVASAM KIRUBARAJ. A | Mrs. | JEBASHEBA. M |
| 29-Jan | Mr. | CHARLES DINESH. C.J | Mrs. | RAICHEL JEMIMA. T |
| 31-Jan | Mr. | RAJENDRA BABU | Mrs. | PREMA. G |
| 31-Jan | Mr. | JOSEPH BHASKAR. D | Mrs. | FATHIMA AROKYA MARY |
| 31-Jan | Mr. | SANTHOSH SAMUEL. S.V | Mrs. | PRAISY JOYBELL. A |

# நலமே தருக புத்தாண்டே!

இதோ
திறக்கப்பட்டிருக்கிறது
புதிய பூபாளத்தின் கதவு !

இதோ
விரிக்கப்பட்டிருக்கிறது
புதிய நம்பிக்கையின் கனவு !

மனிதம் தொட்டு
கவிதை எழுத
கொடுக்கப்பட்டிருக்கிறது
ஒரு கிருபையின் ஆண்டு !

இந்த ஆண்டில்
ஒற்றுமையின் இழை பின்னி
புதிய
சகோதர உறவு நெய்வோம்.

வன்மத்தின் களை பிடுங்கி
புதிய
வாழ்வியல் உழவு செய்வோம்.

சுயநலத்தின்
குறுக்கு வழிகளில்
தவழ்ந்து திரியாமல்
பிறர் நலத்தின்
பெருவெளிகளில் பறந்து திரிவோம்.

சந்தேகத்தின்
சாரலுக்குள் சங்கமிக்காமல்
நம்பிக்கையின்
நங்கூரங்களில் கட்டப்படுவோம்.

டிஜிடலின்
வெளிச்சத் திரைகளில்
இருண்டு கிடக்காமல்,
சமூகத்தின்
இருண்ட வீதிகளில்
வெளிச்சம் விளம்புவோம் !

சாக்குப் போக்குகளின்
சந்துகளில்
கூடாரமடித்துக் குடியிருக்காமல்
செபத்தின்
மௌனங்களில்
நிலைத்து நிற்போம் !

ஆறுதல் வசனங்களால்
சோம்பலடையாமல்
பிறருக்கு
ஆறுதலளிக்கும் வசனமாய்
நாம் மாறுவோம் !

புத்தாண்டு என்பது
நாம் மகிழ்வை
அடைவதற்கானதல்ல,
பிறருக்கு மகிழ்வை
அளிப்பதற்கானது !

நமது
விருப்பங்களின் திரியை
ஏற்றுவதை விட
பிறரின்
ஏக்கங்களின் நிலையை
மாற்றுவதற்கானது !

சிந்திப்போம்,
இறைவன் தந்த இந்த ஆண்டை
அன்பின் செயல்களால்
நிறைத்து
இறைவனுக்கே அளிப்போம்

அனைவருக்கும
இனிய புத்தாண்டு நல் வாழ்த்துகள்



சௌந்தர் பிரஸ், போன் : 9444165907





# திடப்படுத்தல் வழிபாடு – 2022










சௌந்தர் பிரஸ்,போன் : 9444165907